மாகாணக் கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்
க.பொ.த (உ/தர)ப் பரீட்சை -மூன்றாம் தவணை – 2026

வணிகக்கல்வி I,II Business studies I,II	மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் தரம் - 12 (2027)	32	T	I,II

அறிவுறுத்தல் :

- எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- *01* தொடக்கம் *15* வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- *16* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண்:.....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்	
வினாத்தாள் I இற்கானது	
வினா இல	புள்ளிகள்
01 – 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி – I

1) வணிகமொன்றின் அடிப்படை நோக்கம் பணம் உழைப்பதும் செல்வம் சேர்ப்பதும் ஆகும். இவ்விடயம் வணிகத்தின் எப்பண்புடன் தொடர்புபடுகின்றது?

(1) விற்பனை / பரிமாற்றம் இடம்பெறல்
(2) இடர்கள் காணப்படல்
(3) இலாபத்தினால் ஊக்குவிக்கப்படல்
(4) விருப்பத்தினை தோற்றுவித்தல்
(5) கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ச்சியாகக் காணப்படல் (.....)

2) பின்வரும் அட்டவணையில் வணிகத்தின் பேரண்டச் சூழல் விசைகளும் அவற்றின் பயன்பாடுகளையும் தருகின்றது.

பேரண்டச் சூழல்	வணிகப்பயன்பாடுகள்
1) தொழில்நுட்பம்	A. உணவகங்களில் பொலித்தீன் பயன்பாட்டை கட்டுப்படுத்தல்.
2) சட்டம்	B. *GSP* வரிச்சலுகை கிடைக்கப்பெறல்
3) அரசியல்	C. உள்நாட்டு விலையின் உறுதிப்பாட்டுத் தன்மை
4) பொருளாதாரம்	D. *2024* ஆம் ஆண்டு *9* ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம்
5) பூகோளமயமாதல்	E. *CHAT GPT* இன் பயன்பாடு

மேலே தரப்பட்டுள்ள பேரண்டச் சூழல் விசைகளில் ஒழுங்கிற்கு அமைவாக வணிக பயன்பாடுகளை சரியாக தொடர்புறுத்தும் தெரிவு யாது?

(1) A, B, D, E, C (2) B, E, D, C, A (3) C, E, D, B, A
(4) E, B, D, C, A (5) E, D, A, C, B (.....)

Past Papers Wiki

3) பின்வருவன நுகர்வோன் தொடர்பிலான சில வெளிப்படுத்தல்கள் ஆகும்.

A. தொடர்ச்சியாக பங்குபற்றல்
B. நுகர்வோர்
C. விழிப்புணர்வு
D. ஒத்துழைப்பு
E. பாதுகாப்பு
F. தெரிவு செய்தல்
G. அடிப்படைத் தேவை
H. சமூக அக்கறை
I. ஆரோக்கியமான சூழல்
J. சூழல் அக்கறை

மேலே குறித்தவற்றுள் நுகர்வோர் உரிமைகளை மட்டும் வெளிப்படுத்தும் விடைத் தொகுதி யாது?

(1) A, E, G, H, I (2) B, D, F, H, I (3) B, E, F, G, I
(4) D, E, H, I, J (5) D, F, H, I, J (……..)

4) வரையறுத்த தனியார் கம்பனியுடன் ஒப்பிடும் போது வரையறுத்த பொதுக்கம்பனியில் வேறுபாடாக அமையும் பண்பாக அமைவது

(1) சட்ட ஆளுமை ஆகும்.
(2) ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை ஆகும்.
(3) நட்டபொறுப்பு வரையறுக்கப்பட்ட தன்மை ஆகும்.
(4) கம்பனி சட்டத்தின் தாக்கத்திற்கு உட்படுத்தல் ஆகும்.
(5) பங்கின் உரிமையினை கைமாற்றுதல் ஆகும் (……..)

5) வணிக அமைப்புக்கள் தொடர்பான பண்புகளைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட அட்டவணையில் சரியான வெளிப்படுத்தலை தரும் விடை யாது?

வணிகஅமைப்பு		சட்ட ஆளுமை	நட்டப்பொறுப்பு	மூலதனம் திரட்டும் வழி
(1)	கூட்டுறவு	உண்டு	வரையறுக்கப்படவில்லை	பங்கு வழங்கல்
(2)	அரசதிணைக்களம்	இல்லை	வரையறுக்கப்படவில்லை	வரவு செலவுத்திட்டம்
(3)	பொதுக்கம்பனி	இல்லை	வரையறுக்கப்பட்டது	பங்கு வழங்கல்
(4)	அரசகம்பனி	இல்லை	வரையறுக்கப்பட்டது	பங்கு வழங்கல்
(5)	பங்குடமை	உண்டு	வரையறுக்கப்பட்டது	பங்காளர் மூலதனம்

(……..)

6) முயற்சியாண்மையில் கருத்துக்களை தோற்றுவித்தல் செயன்முறை அழைக்கப்படுவது

(1) புதியவற்றை கண்டுபிடித்தல் (2) யாதார்த்தமாக்குதல்
(3) பிரதிபலன்களை பெறுதல் (4) வடிவமைத்தல்
(5) சோதனை செய்தல் (……..)

7) பின்வருவன பல்வேறு நிதிநிறுவன வகைகள் ஆகும்.

A. பங்குதரகர்கம்பனி
B. முதல் நிலை வணிகர்கள்
C. குத்தகைக்கம்பனி
D. காப்புறுதிக் கம்பனி
E. சந்தை இடையீட்டாளர்
F. ஊழியர் சேமலாபநிதியம்
G. நுண்கடன் கம்பனிகள்
H. கூட்டுறவு கிராமியவங்கி
I. நம்பிக்கை கூறுகள் நிதி முகாமைத்துவ கம்பனி
J. நிதிக்கம்பனிகள்

மேலே தரப்பட்டுள்ள நிதி நிறுவன வகைகளில் இலங்கை மத்திய வங்கியின் நேரடி நெறிப்படுத்தலிற்குள் உள்ளடங்கும் நிறுவனங்களின் தொகுதி யாது?

(1) A, C, D, E, J (2) B, C, F, G, J (3) C, D, F, G, I

(4) C, D, F, G, J (5) E, F, G, H, J (……..)

8) இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டம் ($SLDIS$) தொடர்பில் தவறான கூற்றாக அமையும் விடை யாது?

(1) இலங்கை மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படுகின்றது.

(2) வர்த்தக வங்கிகள், நிதிநிறுவனங்களில் உள்ள கூட்டு / தனிநபர் சேமிப்பு நிலையான வைப்புகளிற்கு பொருந்தும்.

(3) ஆகக் கூடிய இழப்பீட்டு எல்லை ரூபா 1100 000 ஆகும்.

(4) வைப்பாளர்களின் நம்பிக்கையை ஏற்படுத்தல் நோக்கமாகக் காணப்படும்.

(5) பங்குச் சந்தை முதலீடுகள், அரச ஆவண முதலீடுகளிற்கும் பொருத்தமுறும். (……..)

9) பின்வரும் A, B ஆகிய கூற்றுக்களை கருதுக.

கூற்று A - சேமிப்பு, நடைமுறை வைப்புக்கள் இரண்டிலும் வைப்புக்களிற்கான வட்டி வருமானம் கிடைக்கப்பெறும்.

கூற்று B - சேமிப்பு நடைமுறை வைப்புக்கள் ஆகிய இரண்டிலும் காசோலை வைப்புக்களை மேற்கொள்ள முடியும்.

மேற்குறித்த இரண்ட கூற்றுக்களிலும்

(1) A சரியானதாகும் அதே வேளை B தவறானதாகும்.

(2) A தவறானதாகும் அதே வேளை B சரியானதாகும்.

(3) A மற்றும் B ஆகிய இரண்டும் தவறானதாகும்

(4) A, B ஆகிய இரண்டும் சரியாகும் அதே வேளை B ஊடாக A விபரிக்கப்படுகின்றது.

(5) A, B ஆகிய இரண்டும் சரியாகும் அதே வேளை A ஊடாக B விபரிக்கப்படுகின்றது.

(……..)

10) இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ($IRCSL$) உரித்தாவது

(1) பகுதியளவு அரச துறைக்காகும் (2) அரச துறைக்காகும்

(3) தனியார் துறைக்காகும் (4) கூட்டுறவு துறைக்காகும்

(5) அரச மற்றும் தனியார் துறைக்காகும் (……..)

11) தொடர்பாடலில் குறிமுறைப்படுத்தலின் ($Encoding$) போது இடம் பெறும் விடயம் யாது?

(1) செய்தி கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்தும்

(2) செய்தியின் கருத்தை மாற்றும் செயன்முறையாகும்

(3) செய்தி தொடர்பில் விளக்கம் பெறப்பட்டதை உறுதிப்படுத்தல்

(4) எண்ணம் ஒரு செய்தியாக மாற்றப்படும் செயன்முறையை குறிக்கும்

(5) செய்தியை செவிமடுத்தவர் வெளிப்படுத்தும் முறையைக் குறிக்கும்.

(……..)

PAST PAPERS WIKI

12) அவசர தேவைக்கான மருந்துப்பொருட்களை விநியோகிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுவது
(1) கிரயம் (2) விரைவு (3) கொள்ளளவு (4) பொருளின்தன்மை (5) கிடைப்பனவுத் தன்மை
(……..)

13) பின்வரும் அட்டவணையானது பல்வேறு ஏற்பாட்டியல் முறைகளையும் அதற்கான விபரணங்களையும் தருகின்றது.

ஏற்பாட்டியல் முறைகள்	விபரணங்கள்
i. மூன்றாம் தரப்பு ஏற்பாட்டியல்	A. விநியோகத்தின் பின் பயன்படுத்திய கொள்கலன்களை தொழிற்சாலைக்கு ஒப்படைத்தல்
ii. நேர்மாற்று ஏற்பாட்டியல்	B. உற்பத்தி வரையிலான அசைவில் கடினத்தன்மை
iii. அதிகரித்த பெறுமதியில் வெளிநோக்கிய ஏற்பாட்டியல்	C. வியாபார நடவடிக்கைகளை வெளியாருக்கு பெற்றுக் கொடுத்தல்
iv. அதிகரித்த பெறுமதியில் உள்நோக்கிய ஏற்பாட்டியல்	D. உற்பத்தியின் பின் நுகர்வோருக்கு கிடைக்கும் வரையில் சிக்கல் தன்மை
v. சமப்படுத்தப்பட்ட ஏற்பாட்டியல்	E. உள்நோக்கிய, வெளிநோக்கிய அசைவில் சமனான தன்மை

மேலே தரப்பட்டுள்ள ஏற்பாட்டியல் முறைகளின் ஒழுங்கிற்கு அமைய பொருத்தமான விபரணங்களை வெளிப்படுத்தும் விடைத் தொகுதி யாது?

(1) A, C, D, B, E (2) C, A, D, B, E (3) C, E, B, D, A

(4) E, A, D, B, C (5) E, D, A, C, B (……..)

14) கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளும் முகவராகக் காணப்படுபவர் யார்?

(1) ஏலவர் (2) தரகர் (3) காரணிகர்

(4) தரகுமுகவர் (5) நம்பிக்கை பொறுப்பு முகவர் (……..)

15) சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய $BRICS$ இன் உறுப்புரிமை நாடுகளை சரியாக குறிக்கும் விடைத் தொகுதி யாது?

(1) பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா, தென்கொரியா

(2) பிரித்தானியா, ரஸ்யா, இந்தியா, சீனா, தென்கொரியா

(3) பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா, தென்கொரியா

(4) பிரித்தானியா, றுமேனியா, இந்தியா, கனடா, தென்ஆபிரிக்கா

(5) பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா, தென்ஆபிரிக்கா (……..)

❖ **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களிற்கு விடையெழுதும் போது பொருத்தமான சொல் / சொற்களை பயன்படுத்துக.**

16) அ) இலத்திரனியல் வழியிலான சந்தை உருவாக்கம் ..... என்பதுடன் பௌதிக ரீதியான சந்தை உருவாக்கம் ..... எனவும் அழைக்கப்பெறும்.

ஆ) உள்நாட்டு விலை நிலையுறுதியானது ..... கொள்கையுடன் தொடர்புறும் என்பதுடன் அவ் உறுதிப்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் ..... னால் மேற்கொள்ளப்படும்.

17) அ) பொதுநலநோக்குடன் ..... கம்பனிகள் கூட்டிணைக்கப்படும் என்பதுடன் அங்கு ..... பகிர்வு காணப்படாது.

ஆ) பெறுமான அளவுகோல் தொழிற்பாட்டினால் பொருட்கள் சேவைகளிற்கு ..... மேற்கொள்ளப்படுகின்றது என்பதுடன் அதில் தொடர்ச்சியான அதிகரிப்பு ..... விளைவு என அழைக்கப்படும்.

18) அ) பங்கு தரகர் கம்பனிகள் முதலீட்டாளர்களின் ..... மற்றும் ..... கட்டளைகளை நிறைவேற்றும்.

ஆ) நடைமுறைக்கணக்கினை பேணும் வணிக வங்கி ..... என்பதுடன் கணக்கு உரிமையாளர் ..... எனவும் அழைக்கப்படுவர்.

19) அ) கணக்கு மீதிவரை ..... அட்டையையும் கடன் எல்லை வரை ..... அட்டையையும் பயன்படுத்த முடியும்.

ஆ) உள்நோக்கி ஏற்பாட்டியல் ..... ல் தொடங்கி ..... வரை இடம் பெறும் அசைவுகளை குறிக்கும்.

20) அ) முகவரின் மூலம் பொருட்களுக்கான கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளல் ..... முறை என்பதுடன் வெளிநாட்டு உற்பத்தியாளருக்கு நேரடியாக கட்டளை வழங்கல் ..... முறை ஆகும்.

ஆ) கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள் நல்ல நிலைமையில் காணப்படும் போது ..... சுமைச்சீட்டும் உடைவு சேதங்கள் காணப்படின் ..... சுமைச்சீட்டும் வழங்கப்படும்.

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைத் தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.**

21) வணிக சேர்க்கையின் வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

(1) மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்று இன்னொரு மென்பான உற்பத்தி நிறுவனத்துடன் இணைதல் .....

(2) பாதணி உற்பத்தி நிறுவனமொன்று தோல் உற்பத்தி நிறுவனம் ஒன்றுடன் இணைதல் .....

(3) கைத்தொலைபேசி உற்பத்தி நிறுவனம் ஒன்று வாகன உற்பத்தி நிறுவனத்துடன் இணைதல் .....

Past Papers Wiki

(4) ஆடை தயாரிப்பு நிறுவனமொன்று அவ் ஆடைகளை விநியோகிக்கும் நிறுவனத்துடன் இணைதல் .....

22) இலத்திரனியல் வணிக மாதிரிகள் நான்கைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

23) இலத்திரனியல் வங்கிச் சேவைகளின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் நான்கு சேவைகளை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....

24) நாட்டின் பணநிரம்பலை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நான்கு கருவிகளைப் பெயரிடுக.

1. .....
2. .....
3. .....
4. .....

25) சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய பின்வரும் குறியீடுகள் எவற்றுடன் தொடர்புறுகின்றது என்பதை கோட்டில் குறிப்பிடுக.

1.  .....

2.  .....

3.  .....

4.  .....

பகுதி II

- **அறிவுறுத்தல்கள்**
  - **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி அ

1) பிரணவன் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் உடல் உறுதி பயிற்றுவிப்பாளர் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்து தனது நண்பர்களுடன் சேர்ந்து *'BT – FITNESS'* எனும் பெயரில் பயிற்சிமையம் ஒன்றினை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார். மேலும் ஆரம்பகாலத்தில் வேறொரு பயிற்சி நிலையத்தில் இரு வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தினையும் கொண்டுள்ளார். குறுகிய காலத்தில் சந்தையின் பெரும் பங்கை கைப்பற்றியதுடன் தனது பயிற்சி மையத்தினது இலாபத்தினையும் உயர்த்தியுள்ளார்.

i. (அ) *BT – FITNESS* பொருள் அல்லது சேவை உற்பத்தி வணிகமா என்பதைக் குறிப்பிட்டு நீர் குறிப்பிட்டமைக்கான காரணத்தினையும் தருக. *(1 புள்ளி)*

(ஆ) குறித்த வணிகத்தின் உற்பத்திப்பொருளின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

ii. (அ) *BT – FITNESS* இன் இரு பலங்களை எடுத்துக் காட்டுக. *(1 புள்ளி)*

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட வணிகத்தின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

iii. (அ) பிரணவன் முயற்சியாண்மைத் திறனையும் பண்பையும் விருத்தி செய்ய பயன்படுத்திய இரு முறைகளைப் பெயரிடுக. *(1 புள்ளி)*

(ஆ) குறித்த வணிகத்தின் வாடிக்கையாளர்களின் அளவை அதிகரிக்க நீர் கூறும் ஆலோசனைகள் இரண்டினைத் தருக. *(1 புள்ளி)*

iv. குறித்த வணிகத்தில் பயன்படும் நான்கு உற்பத்திக் காரணிகளை எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

v. (அ) *BT – FITNESS* மீது பிரணவனும் நண்பர்களும் அக்கறை கொள்வதற்கான இரு காரணங்களை விளக்குக. *(1 புள்ளி)*

(ஆ) *BT – FITNESS* இல் தொழில்நுட்பச் சூழலின் தாக்கம் எவ்வாறு காணப்படும் என்பதை உதாரணம் மூலம் விளக்குக. *(1 புள்ளி)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

2. 'வணிகங்கள் சமூகத்திற்கு திருப்பி தருபவை சமூகப் பொறுப்பாகும்' என்பது பிலிப்பைன்ஸ் நாட்டின் சமூகப்பொறுப்பு தொடர்பான விளக்கம் ஆகும்

i. (அ) வணிகங்கள் சமூகத்திற்கு தமது இலாப உழைப்பில் இருந்து மேற்கொள்ளக் கூடிய பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) தற்காலத்தில் வணிகங்கள் நிறைவேற்றும் சமூப் பொறுப்பும் ஒரு மறைவான விளம்பரமாக கருதப்படுகின்றது. இதனை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக. *(1 புள்ளி)*

ii. (அ) வணிக ஒழுக்க கோவை ஒன்றை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு காரணிகளைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) நிலைபேறான அபிவிருத்திக்காக வணிகங்கள் செயலாற்றும் போது எவ் வளங்களை பாதுகாத்து செயற்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுக. *(1 புள்ளி)*

iii. அரசானது பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் வரியினை அறவிடும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

(அ) வரியினை அறவிடும் அரச நிறுவனங்களை பெயரிடுக. *(1 புள்ளி)*

(ஆ) அரசானது வரியினை விதிப்பதன் ஊடாக அடைய எதிர்பார்க்கும் நோக்கங்கள் இரண்டினை தருக. *(1 புள்ளி)*

iv. (அ) இலங்கை மத்திய வங்கி பகிரங்க சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்யும் போது கடன் வழங்கும் ஆற்றல், கடன் பெற்றுக் கொள்ளும் கிரயம் என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தித்தினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) வணிகங்கள் பொருளாதார நோக்கத்திற்கு பங்காற்றும் இரு முறைகளை தருக. *(1 புள்ளி)*

v. (அ) இலங்கையில் நுகர்வோரை பாதுகாக்கும் முதன்மை அரசு நிறுவனத்தினை பெயரிடுக. *(1 புள்ளி)*

(ஆ) நுகர்வோர் பொறுப்புக்கள் இரண்டினைத் தருக. *(1 புள்ளி)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

3. ஆனந்தகுமார் என்பவர் *A.K* மோட்டோர்ஸ் என்ற நிறுவனத்தை தனது சொந்த முதலீட்டுடன் ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார். எதிர்காலத்தில் இவ் வணிகத்தை ஒரு தனியார் கம்பனியாக மாற்றுவதுடன் முன்னணி நிறுவனமாகக் காணப்படும் மோட்டார் கம்பனியையும் கொள்வனவு செய்து சந்தையை விரிவாக்க தீர்மானித்துள்ளார்.

i. (அ) *A.K* மோட்டோர்ஸ் தொடர்பான சட்ட தாக்கத்தினை விபரிக்குக. *(1 புள்ளி)*

(ஆ) குறித்த வணிக அமைப்பின் (*A.K* மோட்டோர்ஸ்) அனுகூலங்கள் இரண்டினை விளக்குக. *(1 புள்ளி)*

ii. (அ) தனியார் கம்பனியாக மாற்றுவதற்கு தொடர்புறும் சட்டத்தினை குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) ஆரம்ப வணிகத்தினை தனியார் கம்பனியாக மாற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டினை விபரிக்குக. *(1 புள்ளி)*

iii. தனியார் கம்பனியொன்றாக கூட்டிணைப்பதற்கு சமர்ப்பிக்கத் வேண்டிய ஆவணங்களை பட்டியற்படுத்துக. *(1 புள்ளி)*

iv. (அ) *A.K* மோட்டோர்ஸ் முன்னனியாக இன்னொரு மோட்டார் கம்பனியின் சொத்துக்கள் பொறுப்புக்களை கொள்வனவு செய்தல் எவ்வாறு அழைக்கப்படும் என்பதைத் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) நீர் குறிப்பிட்ட விடயத்தின் ஊடாக உருவாகும் சேர்க்கை அல்லது இணைப்பு எவ்வாறு அழைக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு விளக்குக. *(1 புள்ளி)*

v. (அ) நாட்டில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் சில எரிபொருள் விற்பனைக்கான அங்கீகார வணிக ஒப்பந்தத்தினை பெற்று அவ்வணிகத்தை நடாத்தி செல்கின்றன. அது எவ்வகை அங்கீகாரவணிகம் ஆகும் என்பதனைக் குறிப்பிட்டு விளக்குக. *(1 புள்ளி)*

(ஆ) பங்குடமை ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி ஆ

4.

i. (அ) அரச திணைக்களம், அரச கூட்டுத்தபானம் என்பவற்றை சட்ட ஆளுமை, மூலதனம் திரட்டும் வழிகள் என்ற அடிப்படையில் வேறுபடுத்துக. *(1 புள்ளி)*

(ஆ) வணிகம் ஒன்றிலிருந்து முயற்சியாண்மை வேறுபடக் கூடிய இரு பண்புகளைத் தருக. *(1 புள்ளி)*

ii. முயற்சியாண்மையின் விளைவாக தனிநபர் மற்றும் நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுகூலங்கள் இரண்டினைத் தனித்தனியாகத் குறிப்பிடுக. *(2 புள்ளி)*

iii. (அ) தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (*NCGI*) எவ் நிறுவனங்களிற்கு கடன் வசதிகளை வழங்குகின்றது என்பதனைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) முயற்சியாண்மை திறன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

iv. (அ) நுண் சிறிய நடுத்தரளவ வணிகங்களை இனங் காண்பதற்கான பண்புசார் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

(ஆ) நுண்சிறிய நடுத்தரளவு வணிகங்கள் தொடர்பில் அரசினால் வழங்கப்படும் நிதிசார் ஊக்குவிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

v. சட்டப் பணத்திற்கும், எண்ணியல் நாணயத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைத் தருக. *(2 புள்ளிகள்)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

5.

i. இலங்கை மத்திய வங்கியின் பின்வரும் நிதி உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கத்தினை குறிப்பிடுக.

a. SLIPS *b. SSSS* *c. RTGSS* *d. SSDS*

(2 புள்ளி)

ii. உரிமம் பெற்ற வணிக வங்கி மற்றும் உரிமம் பெற்று விசேட வங்கிகள் என்பவற்றை வைப்புக்கள் மற்றும் அந்நிய நாணயக் கொடுக்கல் வாங்கல் என்பவற்றின் கீழ் வேறுபடுத்திக் காட்டுக. *(2 புள்ளி)*

iii. (அ) நிகழ்நிலை வங்கி நடவடிக்கைகள் ஊடாக பெற்றுக் கொள்ள கூடிய சேவைகள் இரண்டு தருக. *(1 புள்ளி)*

(ஆ) காசோலையினை சாட்டுதல் செய்தலிற்கும் காசோலை புறக்குறிப்பிடலும் இடையிலான தொடர்பை விளக்குக. *(1 புள்ளி)*

iv. (அ) இலத்திரனியல் பணத்துடன் தொடர்புடைய தரப்பினரைப் பெயரிடுக. *(1 புள்ளி)*

(ஆ) மறுகாப்புறுதினால் காப்புறுதி செய்பவர் பெற்றுக் கொள்ளும் இரு நன்மைகளை தருக. *(1 புள்ளி)*

v. (அ) மோட்டார் காப்புறுதியில் பூரண காப்புறுதி எவ் இடர்களை உள்ளடக்குகின்றது என்பதை எடுத்துக்காட்டுக. *(1 புள்ளி)*

(ஆ) காப்புறுதி நிறுவனங்களை நெறிப்படுத்தும் அமைப்பினை பெயரிடுக. *(1 புள்ளி)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

6.

i. (அ) போக்குவரத்து ஊடகம் ஒன்றை தெரிவு செய்யும் போது 'கிரயம்' கவனத்தில் கொள்ளப்படும். அங்கு கிரயம் என்பதால் கருதப்படுவது யாது என்பதைக் குறிப்பிட்டு அது எவ்வாறு பொருளின் விலையில் செல்வாக்கு செலுத்தும் என்பதை எடுத்துக் காட்டுக. *(1 புள்ளி)*

(ஆ) பல்மாதிரி போக்குவரத்து $(Multi - Modal)$ என்னும் சொற்பதத்தினை விளக்குக. *(1 புள்ளி)*

ii. (அ) களஞ்சியசாலையில் பொருளைக் கையாளும் முறையான தட்டுக்களுடான இறாக்கை முறையின் இயல்பினை சுருக்கமாக விபரிக்குக. *(1 புள்ளி)*

(ஆ) அதிகரித்த பெறுமதியில் உள்நோக்கிய ஏற்பாட்டியலில் இருந்து அதிகரித்த பெறுமதியில் வெளிநோக்கிய ஏற்பாட்டியல் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக. *(1 புள்ளி)*

iii. மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கை குறிப்பிடுக. *(2 புள்ளி)*

iv. (அ) முகவர், விநியோகஸ்தர் போன்ற தரப்பினரை வரைவிலக்கணப்படுத்துக. *(1 புள்ளி)*

(ஆ) சர்வதேச வர்த்தகத்தின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த இரு காரணிகளைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

v. மாதிரி பட்டியல் $(Proforma)$, வணிக / வியாபார பட்டியல் என்பவற்றை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. *(1 புள்ளி)*

(மொத்தம் 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library